10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 168 புதன்கிழமை நவம்பர் 08 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## எரிபொருளுடன் வருகிறது இந்தியக் கப்பல்

கொழும்பு, நவ.08

எரிபொருட்களுடனான இந்தியக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வந்துகொண்டிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்துள்ளார். எரிபொருள் நெருக்கடி நிலை தொடர்பாக முன்வைக்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இந்த விடயத்தை குறிப்பிட்டார். எரிபொருளை 06

## கேணியில் மூழ்கி மாணவன் பலி!

### மானிப்பாயில் பரிதாபம்

மானிப்பாய், நவ.08

மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் கோவில் கேணிக்குள் விழுந்து மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

மானிப்பாயை சேர்ந்த சூரியகுமார் புவனீதன் என்ற 17 வயது சிறுவனே நேற்று இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

அடையாள அட்டை கேணிக்குள் விழுந்த காரணத்தால் அதை எடுப்பதற்காக சென்ற போதே மேற்படி மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைக்காக தற்போது சடலம் யாழ். போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எ)

## யுத்தம் முடிந்த பின்பே மதுபாவனை அதிகரிப்பு



கொழும்பு, நவ.08

2010 ஆம் ஆண்டுக்குப்பின்னர் இலங்கையில் மதுசாரப்பாவனை அதிகரித்தமைக்கு வடக்குக் கிழக்கில் மதுபான சாலைகள் விஸ்தரிக்கப்பட்டதே காரணம் என மதுசாரம் மற்றும் போதைவஸ்த்து தொடர்பான தகவல் நிலை 06

## மாவட்ட நீதிபதிகள் 7 பேருக்கு வடக்கு, கிழக்கில் இடமாற்றம்

கொழும்பு, நவ.08

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 7 மாவட்ட நீதிபதிகளுக்கு வருடாந்த இடம்மாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இந்த இடம்மாற்றம் 2018 ஜனவரி முதலாம் திகதி 06

## முள்ளிவாய்க்காலில் 50 மிதிவெடிகள் மீட்பு





முல்லைத்தீவு, நவ.08

முள்ளிவாய்க்கால் கிழக்குப்பகுதியில் வீடொன்றிற்கு அருகில் சிறிய கொட்டில் அமைப்பதற்கு குழிதோண்டிய போது உரப்பை ஒன்றில கட்டப்பட்ட நிலையில் ஐம்பது மிதிவெடிகளும் அவற்றிற்கான வெடிப்பிகளும் மீட்கப்பட்டுள்ளன. மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்குப்பகுதியில் உள்ள குடும்பமொன்று அவரது 06

## ‘விக்கியும் விமலும் இனவாதிகள்’

# கல்லோடு கட்டிக் கடலில் வீசுங்கள்

கொழும்பு, நவம்பர் 08

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் தெற்கில் வீரவன்ச போன்ற இனவாதிகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி, நடுக்கடலில் தள்ளிவிட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

புதிய அரசியலமைப்பை வேண்டாம் என்று கூறிய தெற்கு சிங்கள மக்கள் இன்று அதனை வரவேற்பதாகத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நலின் பண்டார, இனவாதிகளின் செயற்பாடுகளால்தான் புதிய அரசியல 06

## வடக்கு மாகாணசபையில் புதிய உறுப்பினர் பதவியேற்பு

யாழ்ப்பாணம், நவ.08

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக வடக்கு மாகாண சபையில் அங்கம் வகித்த உறுப்பினர் றிப்கான் பதியுதீன் அண்மையில் பதவி விலகியநிலையில் நேற்று அந்தக் கட்சி சார்பில் புதிய உறுப்பினரான அலிக்கான் ஷரீப் பதவியேற்றார். வடக்கு மாகாண சபையின் 109வது அமர்வு யாழ் கைத்தடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது 06

## ரயில்வே தொழிற்சங்கம் 48 மணிநேர வேலைநிறுத்தம்

கொழும்பு, நவ.08

சம்பளப் பிரச்சினையை முன்னுறுத்தி இன்று நள்ளிரவு முதல் 48 மணித்தியால வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ள, ரயில்வே தொழிற்சங்கம் தீர்மானித்துள்ளது. இதற்காக, ரயில் ஓட்டுநர்கள் சங்கம் மற்றும் ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் சங்கம் ஆகியோரின் ஆதரவும் கிடைக்கப் பெற்றுள்ளதாக ரயில்வே தொழிற்சங்கம் குறிப்பிட்டுள்ளது. (எ)

## “வாகனங்களுக்கே பெற்றோல்” சுற்றறிக்கை உடனடி வாபஸ்

கொழும்பு, நவ.08

வாகனங்களுக்கு மாத்திரம் பெற்றோல் நிரப்புவதற்கான சுற்றறிக்கையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மீளப்பெற, பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க உத்தரவிட்டுள்ளார். நாட்டில் ஏற்பட்டுள்ள பெற்றோல் தட்டுப்பாட்டையடுத்து, வாகனங்கள் தவிர்த்து போத்தல்கள் போன்ற வேறு எவற்றிலும் பெற்றோல் வழங்கப்படாது என, சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் குறித்த சுற்றறிக்கையை உடனடியாக மீளப்பெறுமாறு நேற்றிரவு அமைச்சரால் பணிக்கப்பட்டுள்ளது. (எ)

## மாகாண ஆளுநருக்கு எதிராக மேல் நீதிமன்று கட்டளை!





யாழ்ப்பாணம், நவ.08

வடக்கு மாகாண ஆளுநர் மத்திய அரசால் நியமிக்கப்பட்டவர். எனினும் அவர் ஆற்றுகின்ற பணிகள் மாகாண அதிகாரத்துக்குட்பட்டவை. எனவே ஆளுநருக்கு உத்தரவிடும் அதிகாரம் மாகாண மேல் நீதிமன்றுக்கு உள்ளது என கட்டளையிட்டிருக்கும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் மரியதாசன் ஜேகூ, வெளிநாட்டுக்குச் சென்று 06

## போலி நாணயத்தாள்கள் அச்சிட்டவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், நவ.08

போலி நாணயத்தாள்களை அச்சிட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தம்பதியரில் குடும்பத்தலைவர் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவரது மனைவி கர்ப்பவதி என்ற காரணத்தால் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இருவரையும் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்தினர். இதன்போதே நீதிவான் சி.சதீஸ்தரன் இவ்வாறு கட்டளை வழங்கினார். போலி நாணயத்தாள்களை அச்சிட்ட குற்றச்சாட்டில் தம்பதியர் அரியாலை மணியந்தோட்டப் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று கைது செய்யப்பட்டனர்.

அவர்களால் அச்சிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் 5,000 ரூபா பெறுமதியான 400 போலி நாணயத்தாள்களும் 1,000 ரூபாபெறுமதியான 168 போலி நாணயத்தாள்களும் அந்த வீட்டிலிருந்து யாழ்ப்பாணம் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தனர். (அ)

## இளைஞர்களின் அமைதியின்மை நாட்டுக்கு நல்லதல்ல

நாடாளுமன்றில் டக்ளஸ் எச்சரிக்கை

கொழும்பு, நவ.08

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் பொது மன்னிப்பு அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி செயலாளருமான டக்ளஸ் தேவானந்தா இளைஞர்களின் அமைதியின்மை, நாட்டுக்கு நல்லதல்ல. இதை அனுபவத்தில் நாம் அனைவரும் அறிவோம் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சட்ட மூலங்களை திருத்துவதற்கான இரண்டாம் (2) ஆம் வாசிப்பு நிலை விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

“அனுராதபுரத்தில் மூன்று தமிழ் அரசியல் கைதிகளின் 41 நாட்களான உண்ணாவிரதப் போராட்டமானது, 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்**

# தென்கொரிய மேயர் மைத்திரியுடன் சந்திப்பு

கொழும்பு, நவ.08
தென்கொரிய தலைநகரான சியோல் நகரத்தின் மேயர் பார்க் வொன்சூன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தார். ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முற்பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது இலங்கையின் சகோதர நகரமொன்று டன் இணைப்பை ஏற்படுத்த சியோல் விரும்புவதாக பார்க் வொன்சூன் தெரிவித்தார். நகரங்களுக்கிடையிலான இத்தகைய இணைப்பு நகர அபிவிருத்தி மூலோபாயங்களைக் கற்றுக் கொள்ள இருதரப்புக்கும் உதவும் என்று ஜனாதிபதி தெரிவித்தார். இலங்கை மற்றும் தென்கொரிய குடியரசுக்கிடையிலான இராஜதந்திர உறவுகளுக்கு 40 ஆண்டுகள் நிறைவடைவதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அடுத்த 40 ஆண்டுகளில் எவ்வாறான பலமான உறவுகளை கட்டியெழுப்பமுடியும் என் பது குறித்து சிந்திப்பதற்கு இது சரியான சந்தர்ப்பம் என்றும் குறிப்பிட்டார். இச்சந்திப்பில் சியோல் நகரத் தின்நான்கு சிரேஷ்ட உறுப்பினர்களைக்கொண்ட தூதுக் குழு மற்றும் இலங்கைக்கான கொரிய தூதுவர் சாங் வொன் சாம் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ)



## 21 மில்லியன் டொலர் அமெரிக்கா நிதி உதவி

கொழும்பு, நவ.08
இலங்கையில் பாலுடன் தொடர்பு பட்ட உற்பத்திகளை மேம்படுத்துவ தற்காக அமெரிக்கா 21 மில்லியன் டொலர் பெறுமதியான திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள் ளது. இலங்கைக்கு விஜயம் செய் துள்ள அமெரிக்காவின் உதவி இரா ஜாங்க செயலாளர் தோமஸ் செனன் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். தோமஸ் செனனுடன் வெளிநாட் டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இந்த விட யம் தொடர்பில் தெரிவிக்கப்பட் டது.இலங்கை அபிவிருத்தி நடவ டிக்கைகளுக்கு முழுமையான ஒத்து ழைப்பு வழங்கப்படும் என்றும் இதன் போது தோமஸ் செனன் மேலும் குறிப்பிட்டார். (எ)

## அநுராதபுரத்தில் 10 பெண்கள் கைது



அநுராதபுரம், நவ.08
அநுராதபுரம் பகுதியில் மசாஜ் நிலையம் என்ற பெயரில் இயங்கி வந்த விபசார விடுதிகளை முற்று கையிட்ட போது,
10 பெண்கள் கைது செய்யப்பட் டுள்ளனர். அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்திய அவர்களை எதிர் வரும் 10 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு அநுராதபுரம் பிரதான நீதவான் ஹர்ஷன கெகுண வெல நேற்று உத்தரவிட்டார். கைது செய்யப்பட்ட பெண்களுக்கு தொற்று நோய்கள் இருக்கின்றதா என ஆராய மருத்துவப் பரிசோதனைக்கு உட் படுத்தி, அறிக்கை ஒன்றை நீதிமன்றுக் குச் சமர்ப்பிக்குமாறும், நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். 20- 30 வயதுக்கு இடைப்பட்ட பெண் களே, இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளனர். (உ)

## 4 இந்திய மீனவர்கள் கடற்படையால் கைது

யாழ்ப்பாணம், நவ.8
நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீன்பிடித் துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள் 4 பேர் நேற்று இலங்கைக் கடற்படையி னரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ரோந்து சென்ற இலங்கைக் கடற்படை யினர் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்ததாகக் கூறி அவர் களைக் கைது செய்துள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. இதன்போது அவர்களின் படகும் கடற்படையால் கைப்பற்றப்பட் டுள்ளது. கைது செய்யப்பட்ட மீனவர் கள் நால்வரும் யாழ்ப்பாணம் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. (உ)

## 35 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ.08
கடந்த மாதம் வெவ்வேறு தினங்களில் கைதான இந்திய மீனவர்கள் 35 பேரையும், எதிர்வரும் 21ஆம் திகதி வரை தொடர்ந் தும் விளக்கமறியலில் வைக்குமாறு, ஊர் காவற்றுறை நீதவான் ஏ.எம்.எம்.றியால், நேற்று உத்தரவிட்டார். குறித்த மீனவர் களை விடுதலை செய்வதற்குரிய சட்ட ஆலோசனை சட்டமா அதிபர் திணைக் களத்திடம் இருந்து கிடைக்கப்பெற்றி ருக்கவில்லை. இதையடுத்து, இது தொடர்பில் கடற்றொழில் நீரியல்வளத் துறை அதிகாரிகள் நீதவானின் கவனத்துக் குக் கொண்டு வந்திருந்தனர். இதைத்தொடர்ந்து வழக்கை ஆராய்ந்த நீதவான், விளக்கமறியலை நீடித்து உத்தர விட்டார். (உ)

# பிள்ளையான் வழக்கு ஜனவரிக்கு ஒத்திவைப்பு



மட்டக்களப்பு, நவ.08
கிழக்கு மாகாண முன்னாள் முதலவர் பிள்ளையான் எனப்படும், சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட 07 பேருக்கு எதிராக மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை தொடர்பான விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது. ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரான கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் என்ற சிவநேச துரை சந்திரகாந்தன் உட்பட ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் ஒருவர் தேடப்பட்டுவரும் நிலையில் ஒருவர் மரணம் அடைந்துள்ளார். இந்த நிலை யில் இந்த வழக்கு நேற்று இரண்டாவது நாளாக மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நீதிபதி இஸ்ஸடீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
இதனடிப்படையில் சாட்சியங்களை பதிவு செய்த மட்டக்களப்பு மேல் நீதிமன் றம், ஜனவரி 3,4,8,9 ஆகிய திகதிகளில் விசாரணைகள் நடத்தப்படும் என தெரிவித் துடன், அன்றைய தினம் அனைத்து சந்தேக நபர்களையும் நீதிமன்றில் ஆஜர்படுத்து மாறும் உத்தரவிட்டது. (உ)

## விடுமுறை எடுத்த மருத்துவர்களிடம் விசாரணை

புத்தளம், நவ.08
புத்தளம் - மதுரங்குளி பிரதேசத் தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்தின் போது காயமடைந்த வர்களை புத்தளம் ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டுவந்த போது சத்திரசிகிச்சை மருத்துவர்கள் இருவர் அன்று விடுமுறையில் இருந்தமை தொடர்பில் விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. விபத்து இடம்பெற் றதன் பின்னர் காயமடைந்தவர்கள் புத்தளம் ஆதார மருத்துவமனைக்கு கொண்டுச் சென்ற போது விசேட மருத்துவர்கள் இருவர் சேவையில் இல்லாதிருந்ததாக மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன. சத்திரசிகிச்சை மருத்துவர்களின் தேவை அத்தியாவசியமாக இருந்த வேளையில், அவர்கள் இருவரும் விடுமுறையில் சென்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த விடயம் குறித்து சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்துக்கு முறைப்பாடு செய்யப் பட்டுள்ளதாக, வடமேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் என். பரீட் தெரிவித்துள்ளார். (எ)

# 500 அரச நிறுவனங்கள் வலைப்பின்னலில் இணைந்தன

கொழும்பு, நவ.08
இலங்கை அரசாங்க வலைப்பின்னல் அறிமுக வைபவம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையில் நேற்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்ட பத்தில் இடம்பெற்றது. இதன் கீழ் 500க்கு மேற்பட்ட அரச நிறுவனங்கள் வலைப்பின் னலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் தொலைத்தொடர்பு டிஜிட்டல் அடிப்படை வசதிகள் அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ, தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் அடிப்படை வசதி பிரதி அமைச்சர் தாரநாத் பஸ்நாயக்க , இலங்கை ரெலிகொம் குழுமத்தின் தலைவர் பி.ஜி. குமாரசிங்க ஆகியோர் கலந்துகொண் டனர். (உ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

புதன். 08 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

## தீண்டப் போகும் பெற்றோல் பாம்பு

கடந்த நாலைந்து நாட்களில் பெற்றோல் பிரச்சினை பெரும் பிரச்சினையாக மாறிவிட்டது. நல்லாட்சி அரசு பதவிக்கு வந்த பின்னர், இந்த வருடத்தில் மட்டும் இத்தோடு மூன்றாவது முறையாக இலங்கை முழுவதும் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு வந்துள்ளது. முதலிரு தடவைகளும் பெற்றோலியக் கூட்டுத்தாபன பணியாளர்களின் வேலைநிறுத்தம் காரணமாகத் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. ஆனால் இம்முறை போதிய எவு பெற்றோல் கையிருப்பில் இல்லாததாலேயே மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால், மலைப்பாம்பு வரிசையில் கால்கடுக்க நிற்க வேண்டியுள்ளது.

ஏறக்குறைய நான்கு நாட்களாகியும் இன்னும் நிலைமை சுமுகத்துக்கு வரவில்லை. இன்னும் இரு பெற்றோல் கப்பல்கள் வந்தவுடன், நவம்பர் 9 ஆம் திகதியுடன், அதாவது நாளையுடன் இந்தப் பெற்றோல் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விடும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சொன்னதைப் பலரும் நம்பத் தயாராக இல்லை. ஏனெனில் 'பெற்றோலுக்குத் தட்டுப்பாடு' என்று ஆரம்பத்தில் செய்திகள் பரவியபோதே, "அப்படி எதுவும் இல்லை. தேவையான பெற்றோல் கைவசம் உண்டு. வதந்திகளை நம்ப வேண்டாம்" எனச் சொன்னவர் தான் இதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. ஆனால் அவர் சொன்னதற்கு மாறாக பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில், பெற்றோல் இல்லை என்ற அறிவிப்பே தொங்கியது. பெற்றோல் உள்ள இடங்களிலோ ஒரு கிலோ மீற்றருக்கும் அதிக நீளமான வரிசையில் நின்றே பெற்றோலைப் பெற வேண்டியிருந்தது.

சிலவேளைகளில் மக்களின் சாதாரண நுகர்வுச் சராசரியை அடிப்படையாக வைத்து, 'தேவையான பெற்றோல் கைவசமுண்டு' என ரணில் சொல்லியிருக்கலாம். ஆனால் 'தட்டுப்பாடாம்' என்ற ஒற்றைச் சொல்லில் உருக்கொண்டு, கைகளில் போத்தல்களோடும், பரல்களோடும் ஓடிய பலர் அவற்றை நிரப்பி வீடுகளில் பதுக்கியதால்தான், இவ்வளவு பெரிய நெருக்கடி நிலை தோன்றியது. அப்படி நெருக்கடி தோன்றினாலும் அதனைச் சமாளித்து, பெற்றோல் இல்லாத இடங்களில் அவற்றை வழங்கும் ஆற்றலும் அரசுக்கு இருக்கவில்லை.

"போர்க்காலத்தில் கூட இப்படியான நிலை வந்ததில்லை" என்று மகிந்த தன் பங்குக்கு புலம்புகிறார். அவர் சொல்வதிலும் நியாயம் இருக்கவே செய்கின்றது. போரின் போது எப்போது, என்ன நடக்குமோ என்ற நிரந்தரத்துவமற்ற நிலையே இலங்கை முழுதும் இருந்தது. அதனால் பெற்றோல் கப்பல் வருமா, இல்லை நடுக்கடலில் எரியுமா என்பது கூடத் தெரியாது. அப்படியிருந்தும் வடக்கு, கிழக்கு தவிர்ந்த பகுதிகளில் பொதுமக்கள் பெற்றோலுக்காகக் 'கியூ'வில் நிற்கவில்லை. ஆனால் இப்போது நிலைமை வேறு. போர் பற்றிய பயமோ, சிந்தனையோ இல்லாமல் மக்களினதும், நாட்டினதும் நலனை மட்டுமே யோசிக்கக் கூடிய காலம். இந்தக் காலத்தில் கூட பெற்றோல் இருக்கிறதா? தேங்காய் இருக்கிறதா? அரிசி சரியான விலைக்கு விற்பனையாகின்றதா? என்பன பற்றியெல்லாம் சிந்திக்காமல், உள்ளூராட்சித் தேர்தல் பற்றியும், கூட்டு எதிரணி கொடுத்த குடைச்சல் பற்றியும் மட்டுமே நல்லாட்சி அரசு மண்டையில் போட்டு, குழப்பிக் கொண்டிருக்கிறது. அதனாலேயே இத்தனை நெருக்கடிகளும்.


உள்ளூராட்சித் தேர்தல் நெருங்கியுள்ள சமயத்தில் நிச்சயமாக இந்தப் பெற்றோல் பாம்பு நல்லாட்சி அரசைத் தீண்டாமல் விடாது போலவே தெரிகிறது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# கேட்டானே ஒரு கேள்வி





கொழும்பு, நவ.08

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனை, தனது ருவிட்டர் பக்கத்தில் தமிழில் கேள்விகேட்டுள்ளார் நாமல் ராஜபக்ச.

அதிகாரப் பகிர்வுக்காக அரசோடு இணைந்து செல்லும் போக்கைக் கூட்டமைப்பு கடைப்பிடிக்கும் என சம்பந்தன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாகவே நாமல் கேள்வி எழுப்பியுள்ளார்.

"அதிகாரப்பகிர்வு கிடைக்கும் என்பதைக் காரணம் காட்டி தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைக் கோராது மௌனமாக இருக்க முடியாது என்பதை, மூத்த அரசியல்வாதி ஆர்.சம்பந்தன் ஐயா அவர்கள் ஏன் உணரவில்லை!" என அவர் தனது ருவிட்டரில் தமிழில் பதிவேற்றியுள்ளார். இந்தக் கேள்விக்கு சம்பந்தன் இன்னும் பதிலளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# குரங்கு செய்த வேலை சிறுவன் உயிரிழப்பு

கொழும்பு, நவ.08

குருநாகல் பிரதேசத்தில் குரங்கு பிடுங்கிய தேங்காய் சிறுவனொருவனின் தலையில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுவன் குருநாகல் லக்தஸ் டி மெல் மகா வித்தியாலயத்தில் தரம் 4 இல் கல்வி கற்று வருபவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியில் உள்ள தென்னையில் குரங்கு இருப்பதை அறியாத சிறுவன் அந்தப் பகுதியூடாகச் சென்றுள்ளார். அப்போது மரத்தில் இருந்த குரங்கு பிடுங்கிய தேங்காயொன்று சிறுவனின் தலையில் விழுந்தது. இதனால் அவர் மயக்கமுற்றுள்ளார்.

உணர்வற்ற நிலையிலிருந்த குறித்த சிறுவன் கண்டி ஆதார வைத்திய சாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு, அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போதிலும், சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார். (அ)

# "இப்ப என்ன செய்வீங்கள்?"




கொழும்பு, நவ.08


பெற்றோல் தட்டுப்பாட்டால் இளைஞர் ஒருவர் செய்த காரியம் பலருக்கும் சிரிப்பை வரவழைத்துள்ளது.

இலங்கை முழுதும் பெற்றோலுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து, எரிபொருள் நிரப்பு நிலையங்களில், வாகனங்களுக்கு மாத்திரமே பெற்றோல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஏனெனில் வர்த்தகர்கள் பலரும் தமது ஆட்களை அனுப்பிப் போத்தல்கள், பரல்கள் என்பவற்றில் பெற்றோலை வாங்கி, அவற்றைக் கறுப்புச் சந்தையில் அதிக விலைக்கு விற்பதாகத் தகவல் கிடைத்திருந்தது. அதனைக் கட்டுப்படுத்தவும், வேகமாக அனைவருக்கும் பெற்றோலை வழங்கவுமே வாகனங்களுக்கு மட்டுமே பெற்றோல் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்த நிலையில் கொழும்பு, களனிப் பகுதியில் இளைஞர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளின் எரிபொருள் தாங்கியைத் தனியாகக் கழற்றி, அதனை எரிபொருள் நிலையத்துக்குக் கொண்டு வந்துள்ளார். இதனைப் பார்த்த , எரிபொருள் நிரப்ப வந்த ஏனையோர் அழுவதா, சிரிப்பதா என்று தெரியாமல் குறித்த இளைஞனையும், எரிபொருள் தாங்கியையும் செல்போனில் படமெடுத்து பதிவேற்றினர். தற்போது அந்தப் படம் பலரால் வேகமாகப் பகிரப்பட்டு வருகின்றது. (அ)

# குடியிருப்புக்குள் பதுங்கிய முதலை



திருகோணமலை, நவ.08

திருகோணமலை- சம்பூரில் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த சுமார் 8 அடி நீளமான முதலை கந்தளாய் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுப் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலையில் வீட்டு உரிமையாளர், வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்த போது, கிணற்று ஓரமாக முதலையொன்று நிற்பதைக் கண்டு கூக்குரலிட்டு, அயலவர்களை அழைத்தார். அப்போது முதலை ஓட முயன்ற வேகத்தில், வீட்டின் முன்னால் உள்ள வடிகாலுக்குள் வீழ்ந்தது.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு இதுகுறித்துத் தகவல் வழங்கியதையடுத்து, அவர்கள்முதலையை பாதுகாப்பாக மீட்டெடுத்துச் சென்றுள்ளனர். (அ)

# ஆனையிறவில் அடுத்த வருடம் 14,000 தொன் உப்பு

கிளிநொச்சி, நவ.08

ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தில், அடுத்த வருடம் 14 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பை உற்பத்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் பணிப்பாளர் திருமதி இந்திகா ரணதுங்க தெரிவித்துள்ளார்.

"ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம் தற்போது தனது உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த உப்பு உற்பத்தி நிறுவனம் இவ்வருடத்தில் 7 ஆயிரம் மெற்றிக் தொன்களாக உற்பத்தியை அதிகரித்துள்ளது. 2018இல் இந்த உற்பத்தியை 14 ஆயிரம் மெற்றிக் தொன்களாக அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம் உப்பு உற்பத்தியை 28 ஆயிரம் மெற்றிக் தொன்களாக அதிகரிக்கும் இலக்குடன் செயற்பட்டு வருகின்றது. எதிர்வரும் 3 வருட காலப்பகுதியில் இந்த இலக்கை அடைய முடியும் இவ்வாறு உப்பு உற்பத்தி அதிகரிக்கப்படுமாயின், உப்பை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை ஏற்படாது. அத்துடன் ஆனையிறவில் தயாரிக்கப்படும் உப்பும் உயர்தரத்தைக் கொண்டுள்ளது " என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## இன்று நாளும் கோளும்

08.11.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 22 ஆம் நாள்

பஞ்சமி மு.ப. 12.43 மணி வரை | திருவாதிரை பி.ப. 09.02 மணி வரை | சித்தயோகம்

இராகுகாலம் 12.00 - 01.30 | சுபநேரம் 09.15 - 10.15 | எமகண்டம் 07.30 - 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெற்றி | நன்மை | லாபம் | செலவு | வரவு | சுகம் | சுபம் | பெருமை | மேன்மை | நலம் | நட்பு | சாந்தம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைக்குறைப்புக்கு சு.க. ஆலோசனை

கொழும்பு, நவ.08

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய முன்மொழிவுகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் ஆலோசனைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஊடகத்துறை மற்றும் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவிடம் கையளித்துள்ளது.

2018 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவினால் நாடாளுமன்றத்தில் நாளை வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்துக்காக சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள ஆலோசனைகளிலேயே விலைக்குறைப்பைச் சுட்டிக்காட்டியுள்ளது. கட்சி சார்பில் இதனை ஐ.ம.சு.மு. நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர, நிதி அமைச்சர் மங்கள சமரவீரவிடம் கையளித்துள்ளார்.

கடந்த வரவு-செலவுத்திட்டத்தின் போதும் சுதந்திரக் கட்சியினால் இது போன்ற யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றில் பெரும்பாலான யோசனைகள் ஏற்கப்பட்டதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி குறிப்பிட்டுள்ளது.(அ)



# அம்புலன்ஸை மோதிய எருமை

திருகோணமலை, நவ.08

நோயாளியொருவரை கொண்டு சென்ற அம்புலன்ஸ் ஒன்று எருமை மாட்டுடன் மோதி, கோமரங்கடவெல பகுதியில் நேற்றிரவு விபத்துக்குள்ளானது.

திருகோணமலை பொது வைத்திய சாலையை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளை வாகனத்தை நோக்கி எருமை மாடு வேகமாக வந்து மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.விபத்தில் சிக்கிய எருமை மாடு அவ்விடத்தில் வீழ்ந்து உயிரிழந்ததாகவும், இன்னொரு அம்புலன்ஸ்வரவழைக்கப்பட்டு, நோயாளி மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (அ)

# பஸ்ஸைப் புரட்டியவருக்கு 15 வரை விளக்கமறியல்



யாழ்ப்பாணம், நவ.08

யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பஸ்ஸை, புத்தளத்தில் புரட்டியெடுத்த சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்று, புத்தளம், மதுரங்குளிப் பகுதியில் நேற்று முன்தினம் புரண்டதில் 7 பேர் பலியானதுடன், 45 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்துக்குக் காரணமான பஸ்ஸின் சாரதி புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில், முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன்போது குறித்த சாரதியை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# தேங்காய் மாயம்

மன்னார், நவ.08

மன்னாரிலும் தேங்காய்க்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையினால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

நாடளாவிய ரீதியில் தேங்காய்க்குத் தட்டுப்பாடு நிலவிய போது கூட, மன்னாரில் அதிக விலை கொடுத்தேனும் தேங்காயை வாங்கக் கூடியதாக இருந்தது. ஆனால் தற்போது வர்த்தக நிலையங்களில் தேங்காயைக் காண்பதே அரிதாக இருப்பதாக மன்னார் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (அ)

# திருமலையில் மர்ம மாளிகை



திருகோணமலை, நவ.08

திருகோணமலையில் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட நிலத்தடி மர்ம மாளிகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

திருகோணமலை 'டீ ரெடவுட்' போர்க்களப் பகுதியில், கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் ஆலோசனைக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போதே இந்த நிலத்தடி அறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலத்தடி அறையின் விசேட பகுதி ஒன்றுக்கு கொங்கிறீட் கலவை பயன்படுத்தப்பட்டு நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.சுரங்கப் பாதை ஊடாக அறைக்குள் நுழைவதற்காக கருங்கல்லால் செய்யப்பட்ட கதவு ஒன்று வைத்து மூடப்பட்டுள்ளது. இதனுள்ளே பீரங்கிகளை வைத்து இயக்குவதற்கான தாங்கியும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தடி மர்ம மாளிகை எதற்காக அமைக்கப்பட்டது என்பது குறித்த ஆய்வுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. (அ)

# 108 கிராமசேவகர்கள் பற்றாக்குறை

மட்டக்களப்பு, நவ.08

மட்டக்களப்பில் கடந்த 3 வருடங்களுக்கு மேலாக 108 கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்கள் உள்ள நிலையிலேயே மாவட்ட நிர்வாகம் இயங்கி வருவதாக ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் முருகுப்பிள்ளை கோமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

"மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தம் 343 கிராம சேவகர் கடமைப் பிரிவுகள் உள்ளன. தற்போது மாவட்டத்தில் 235 கிராம சேவகர்களே கடமையாற்றுகின்றனர். இதே வேளை கிராம சேவகர்கள் இல்லாத 108 கிராமங்களில் கடந்த 3 வருடகாலமாகப் பதில் கடமை மூலமே அந்தந்தக் கிராமப் பிரிவுகளுக்கான நிர்வாக சேவைகள் இடம்பெறுகின்றன.

கிராம சேவை அலுவலர்கள் தமது நியமனம் மற்றும் வயது அடிப்படையில் ஒரு தொகுதியாக ஏக காலத்தில் நியமிக்கப்படுவதும் அதேபோல ஒரு தொகுதியாக ஒரே நேரத்தில் ஓய்வுபெற்றுச் செல்வதுமே இத்தகைய அதிகளவான வெற்றிடங்கள் நிலவுவதற்குக் காரணமாகும்.

வருடாவருடம் கிராம அலுவலர்கள் கிரமமாக நியமனம் செய்யப்படுவார்களாயின் கிராமங்களில் கிராம சேவை அலுவலர்களுக்கான நிர்வாக இடைவெளி ஏற்படாதிருக்கவும், அதேவேளை கிராம அலுவலர்கள் வேலைப்பளுவின்றி கடமையாற்றுவதற்கும் வாய்ப்புக் கிட்டும்.கிரமமாக கிராம உத்தியோகத்தர்கள் நியமனங்கள் இடம்பெறும் வகையில் நிர்வாக ஒழுங்குகள் இருக்குமாயின் இந்தளவு அதிக வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிலவுவதற்கு வாய்ப்பில்லை.ஒரு தொகுதியினர் ஓய்வு பெற்றுச் செல்ல புதிதாக மற்றுமொரு தொகுதியினர் கடமைப் பொறுப்பில் இணைந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இலங்கை அரச நிர்வாகச் சக்கரத்திலே ஆரம்பப் புள்ளியிலும் அதே வேளை மிக முக்கியமான அடிப்படையான நிர்வாகக் கடமைக் கட்டமைப்பிலும் கிராம சேவகர்கள் உள்ளதால் அரச நிர்வாக இயங்கியலுக்கு கிராம சேவகர்களின் கடமை இருப்பு முக்கியமானது.

தமக்கு குறித்தொதுக்கப்பட்ட கிராமங்களில் கடமை செய்வதோடு கிராம சேவகர்கள் இல்லாத கிராமங்களில் பதில் கடமை செய்வதற்குரிய மேலதிகக் கொடுப்பனவுகள் பதில் கடமை புரியும் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படுகின்ற போதிலும் அது தமது அர்ப்பணிப்பான சேவைக்குப் போதாது என கிராம சேவகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்" எனக் குறிப்பிட்டுள்ளார். (அ)

# எங்கடை சம்பாத்தியமெல்லாம், அங்காலை...

போன சனியண்டு வெள்ளேன்ரை கடையிலை சாமான் வாங்க நிண்டனான். அப்பதான் பெடி கடையைத் திறந்த படியாலை அவ்வளவு சனம் இல்லை. இல்லாட்டி "வெள்ளை அதைத்தா, இதைத்தா" எண்டு கனக்க அதிலை வந்து நிண்டு கொண்டு அவனைச் சிப்பிலி ஆட்டிப் போடுங்கள். அதுகும் பள்ளிக்குட நாள் எண்டால், சனங்கள் பிள்ளையளோடை வந்து நிண்டு "சோடா, ரிப்பி ரிப்பி, கன்டொஸ், முறுக்குப் பைக்கற்றை, விசுக்கோத்து" எண்டு கேக்க, "உது வேண்டாம் அது... அது வேண்டாம் இது.. ஐயோ கன்டொஸ் வேண்டாம் மென்டோஸ் வேணும், ரிப்பி ரிப்பி பைக்கற் பெரிசு வேணும்.. விசுக்கோத்துக்குக் கிறீம் பூசினது வேணும்" எண்டு நாண்டு கொண்டு நிக்கிற பிள்ளையளைப் பாக்க வேணும்.

அதைப் பாக்கேக்கை ஒரு பக்கம் சிரிப்பாக் கிடக்கும். மற்றப் பக்கம் எங்கடை சனம் பிள்ளையளுக்குப் பழக்கி வைச்சிருக்கிற சதம் பெறாத பழக்கங்களைப் பாத்துக் கோபமும் வரும். இன்னும் ஒரு பக்கம் நான் சிறுசிலை பள்ளிக்குடம் போன ஞாபகமும் வரும்.

அப்ப ஆக மிஞ்சினால் "பினாட்டு" துண்டை ஆச்சி அப்புவுக்குத் தெரியாமை கடுதாசி ஒண்டிலை சுத்தி காச்சட்டைக்கை செருகி விடுவ. ஒருநாள் அதை வகுப்பிலை பாட நேரத்திலை வைச்சுச் சப்பி வாத்தியாரிட்டை அடியும் வாங்கி இருக்கிறன்.

இப்பிடி நான் யோசிச்சுக் கொண்டிருக்கேக்கை

சடாரென ஒரு பெடிச்சி ஸ்கூட்டியிலை வந்திறங்கினாள். கமக்கட்டுக்கை கிடந்த பாக்கிக்கை கை வைச்சு நீளமான கடுதாசித் துண்டொண்டை எடுத்துக் கோயிலிலை மந்திரம் சொல்லுறமாதிரி கட..கட வெண்டு வாசிச்சாள். அவள் வாசிச்ச சாமானிலை முக்கியம் எண்டு நான் கண்டது அரிசியையும், மாவையும் தான். அதை விட மற்றதெல்லாம் "சிலு சிலு"ப்புத் தான்.

பெடிச்சி சொன்னதிலை சீனி, பாம் ஒயில், பால் மா பைக்கற், சோடா, சொக்லேற் பால், சொக்கிளேற், விசுக்கோத்து, ரிப்பி ரிப்பி,, பற்பசை, சுவிங்கம், பபிள்கம் எண்டது மட்டுந் தான் என்ரை காதுக்குக் கேட்டிது. மிச்சம் கனக்கச் சொன்னவள். எனக்குக் கேக்கேல்லை. கேட்டாலும் ஞாபகம் வைச்சிருக்கிற வயதே? வெள்ளை ஐஞ்சாறு சொப்பினிலை அவ்வளவையும் போட்டுக் குடுத்தான். வாங்கி ஸ்கூட்டியின்ரை சீற்றைத் தூக்கி அரைவாசியை வைச்சாள், மற்றதைக் காலுக்கை வைச்சிட்டு தலையைச் சிலுப்பிக் கொண்டு எடுத்தாளே ஒரு எடுப்பு, ஆமியின்ரை ஜீப்புத் தோத்துப்போகும். ஏன் இப்பிடிச் சனம் காசைச் செலவழிச்சு கண்டதையும் வாங்கி வருத்தத்தைத் தேடுதுகள்?

இண்டைக்கு நான் கே.கே.எஸ் றோட்டிலை பெரிய கடைக்குப் போக நிண்டனான். அப்ப பாத்தன், ஒரு லொறி தும்புத்தடி, கூட்டுமாறு எண்டு ஏத்திக் கொண்டு போகுது. பிறத்தாலை தகரத்தாலை செய்த அலுமாரி லொறி. அதுக்கு பின்னாலை மெத்தை லொறி. பிறகு தேங்காய் லொறி, கதிரை, கம்பாயம் எண்டு வேறை ஒண்டு.அதிலைபோன லொறி ஒண்டிலையும் யாழ்ப்பாண விலாசமில்லை. எல்லாம் பிறத்தி.

பஸ்ஸுக்கு நிண்ட ஒரு பெடி. படிச்சவன் போலை கிடந்திது, கதையைப்போட்டன். "மாமா உதென்ன கதை. அங்காலை இருந்து வாற உந்த மாதிரி அவசியமில்லாத சாமான்களுக்காக ஒவ்வொரு மாதமும் 200 – 300 கோடி போகுது தெரியுமோ? உதிலை வாற சாமான்களிலை அரைவாசியை இஞ்சையே நாங்கள் செய்யலாம். அதை எங்கடை ஆக்கள் செய்ய மாட்டினம்.

மாட்டிலை பாலைக் கறந்து அங்காலை அனுப்பிப் போட்டு அதிலை அவை செய்து இஞ்சை அனுப்பிற பால் பைக்கற்றையும், யோக்கட்டையும் வாங்கிற ஆக்கள் நாங்கள்.

அதைக் கேக்க, என்ரை உச்சியிலை ஆரோ அடிச்ச மாதிரிக் கிடந்திது. கண்ணை மூடித் திறக்கிறதுக்கு முன்னம் பஸ் வந்து நிண்ட சத்தம் கேட்டிது. பாத்தன் பஸ் பெடியையும் ஏத்திக் கொண்டு கனதூரத்துக்குப் போவிட்டுது.

எல்லாம் கனவா...

**- வில்லங்கம் விநாசி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அந்த நாள் ஞாபகம்.....!



**08.11.1811**

இலங்கையில் இயற்றப்பட்ட புதிய நீதிமன்ற சட்டப்படி மேல் நீதிமன்றம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஒன்று கொழும்பில் பிரதம நீதியரசரின் நீதிமன்றமும், Puisne Justice என அழைக்கப்படும் நீதிமன்றம் யாழ்ப்பாணத்திலும் அமைக்கப்பட்டன. கிரிமினல் வழக்குகளுக்கு ஜூரி முறையும் அமுலுக்கு வந்தது.

# மாட்டு வண்டிலில் வந்த மாகாண உறுப்பினர்கள்

கொழும்பு, நவ.08

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் பெற்றோல் நெருக்கடியைச் சுட்டிக்காட்டும் வகையில் கூட்டு எதிர்க்கட்சியினர் மாட்டு வண்டியில் பயணம் செய்துள்ளனர்.

வடமேல் மாகாண சபையினைச் சேர்ந்த கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களே நேற்றுக் காலை மாகாண சபைக்கு மாட்டு வண்டியில் சென்று தமது எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர். “நாட்டின் எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வை வழங்க அரசாங்கம் உத்தரவிட வேண்டும். மக்களை வேண்டுமென்றே அரசு நெருக்கடிக்குள் தள்ளுகின்றது” எனவும் அவர்கள் கோஷமெழுப்பினர். “எண்ணையும் முடிந்தது - நாடும் முடிந்தது” போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் இவர்கள் ஏந்தியிருந்தனர். (அ)

## ஒரே வீட்டில் கூடிய ராஜபக்ச குடும்பம்

கொழும்பு, நவ.08

மகிந்த ராஜபக்சவின் தந்தையான டி.ஏ.ராஜபக்சவின் 50ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மெதமுலான இல்லத்தில் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் மகிந்த ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, பசில் ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச, சமல் ராஜபக்ச ஆகியோர் உட்பட ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் இதில் கலந்துகொண்டனர்.

1906ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி பிறந்த டி.ஏ.ராஜபக்ஸ 1967ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## நெல்லியடியில் நேற்று பொலிஸ் பரிசோதனை



வடமராட்சி, நவ.08

நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தின் இந்த வருடத்துக்கான பரிசோதனையும், குறித்த பொலிஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளின் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடலும் நேற்றுக் காலை 6 மணிக்கு இடம்பெற்றது.

நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ. பியந்த தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கலந்து கொண்டார். (அ-11)

## நீடிக்கும் வாகனத் தடை: பொதுமக்களுக்கு அவதி

வவுனியா, நவ.08

வவுனியா மாவட்ட செயலகத்துக்குள் துவிச்சக்கரவண்டி உட்பட எந்தவொரு வாகனத்தையும் கொண்டு செல்வதற்கான தடை நீடிப்பதால் பொதுமக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர், வவுனியா மாவட்ட செயலகத்தினுள் காரொன்றில் வந்த நபரொருவர், அங்கு பறந்து கொண்டிருந்த தேசியக்கொடியினை இறக்கிவிட்டுச் சென்றிருந்தார்.

இதனையடுத்து குறித்த நபரைப் பொலிஸார் தேடிக் கைது செய்து, விசாரணைகளின் பின்னர் விடுவித்திருந்தனர். இதன் பின்னரே மாவட்ட செயலகத்துக்குள் துவிச்சக்கரவண்டிகள் உள்ளிட்ட எந்தவொரு வாகனத்தையும் பொது மக்கள் உள்ளேகொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதனால் வீதியோரங்களில் பாதுகாப்பற்ற முறையில் வாகனங்களை நிறுத்திவிட்டு நடந்துசென்றே வயோதிபர், விசேட தேவைக்குட்பட்டோர் உட்பட அனைவரும் தமது கடமைகளை செயலகத்துக்குள் நிறைவேற்ற வேண்டிய நிலை காணப்படுகின்றது. எனவே உரிய பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமித்து, சகல வாகனங்களையும் செயலகத்துக்குள் அனுமதிக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## உடைப்பெடுத்தது மன்னாகண்டல் குளம்



முல்லைத்தீவு, நவ.08

முல்லைத்தீவு மன்னாகண்டல் குளம் நேற்றுமுன்தினம் அதிகாலை உடைப்பெடுத்ததால், அந்தக் குளத்தில் தேக்கப்பட்டிருந்த நீர் முற்றாக வெளியேறி விரயமாகியுள்ளது.

குறித்த குளம் கடந்த 2014 ஆம் , 2015 ஆம் ஆண்டுகளில் சுமார் 38 லட்சம் ரூபா செலவில் இரு தடவைகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை வேளையில் துருசுப்பகுதியில் குளம் உடைப்பெடுத்தது. இதன்போது சுமார் பத்து அடிக்கும் நீளமான அணைக்கட்டு உடைந்து சென்றுள்ளது. குறித்த குளத்தில் இரண்டு தடவை அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், அவை சரிவர மேற்கொள்ளப்படாமையினாலேயே குளம் உடைப்பெடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, உடைந்த குளத்தினைச் சீர் செய்யும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன. (அ)

## வவுனியாவில் நேற்று ‘திடீர்’ சுவரொட்டிகள்

வவுனியா, நவ.08

சைட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலான சுவரொட்டிகள் வவுனியாவில் நேற்றுக் காலை பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

“ரணில் - மைத்திரி தீர்வு உன் கையில்!” என்ற வாசகங்கள் சிங்களத்திலும், தமிழிலும் குறித்த சுவரொட்டிகளில் உள்ளன. சைட்டத்தை கலைப்பதாக அரசு அறிவித்த பின்னும் இவ்வாறான சுவரொட்டிகள் ஏன் ஒட்டப்பட்டன என்று தெரியவில்லை என வவுனியா மக்கள் தெரிவித்தனர். (அ)




## வாகன வரி பெற பெரும் சிரமம்



வவுனியா, நவ.08

வவுனியாப் பிரதேச செயலகத்தில் வாகன வரி அனுமதிப்பத்திரம் பெறுவதில் பொது மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிகளவான வாகன உரிமையாளர்கள் வாகன வரி அனுமதிப்பத்திரத்தைப் பெற பிரதேச செயலகத்தை நாடி வருகின்றனர். இருந்த போதிலும் கணினிக் கோளாறு மற்றும் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை என்பவற்றைக் காரணம் காட்டி நீண்ட நேரம் காக்க வைப்பதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

உரிய அதிகாரிகள் இது தொடர்பாகக் கவனம் செலுத்தி வாகன வரி அனுமதிப் பத்திரத்தை துரிதமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கப் போர்க்கப்பல்

கொழும்பு, நவ.08

அமெரிக்க கடலோரக்காவல் படையின் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட போர்க் கப்பல் ஒன்றை இலங்கை கடற்படைக்கு அமெரிக்கா வழங்கவுள்ளது. இலங்கைக்கு நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்ட, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் தோமஸ் சானொான், வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரியவசத்துடன் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே இதுபற்றிக் கூறப்பட்டுள்ளது. வலுவான இருதரப்பு உறவுகளின் அடையாளமாகவும், இலங்கை - அமெரிக்காவின் ஈடுபாடுகளின் ஆழத்தை வெளிப்படுத்தும் வகையிலும், அமெரிக்க கடலோரக் காவல்படையின் கப்பல் ஒன்றை இலங்கை கடற்படைக்கு அமெரிக்கா வழங்கவுள்ளது. காங்கிரஸ் அனுமதி கிடைத்ததும் இது வழங்கப்படும். செக்ரெட்டரி வகையைச் சேர்ந்த உயர்திறன் கப்பல், சிறிலங்கா அதன் கடலோரக் பகுதியையும், சிறப்பு பொருளாதார வலயத்தையும், கடல் பாதை மற்றும் தொலைத்தொடர்பு வழியை பாதுகாக்கவும் உதவும் என்றும் அந்த கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (எ)




# மழைக் காலநிலை நீடிக்கும்

கொழும்பு, நவ.08

நாட்டின் பல பகுதிகளில் இன்றும் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக காலநிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது. இதேவேளை மேலும் சில தினங்களுக்கு மழை நீடிக்க வாய்ப்பு உள்ளதாகவும் காலநிலை அவதான நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய வடக்கு, வடமத்திய, கிழக்கு, தெற்கு மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் இவ்வாறான கால நிலை நிலவகூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேல், தெற்கு சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் 100 மி மீ மழைவீழ்ச்சி கிடைக்கலாம் எனவும் அந்த நிலையம் எதிர்வுகூறியுள்ளது. மேலும் நாட்டைச் சூழ்ந்துள்ள கடல் பகுதிகளில் அதிக மழைவீழ்சி பெய்யக்கூடும் என்பதோடு, காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 70 முதல் 80 கிலோமீற்றர் வரை வீசக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# தீயில் எரிந்த பெண் சிகிச்சை பலனின்றி மரணம்

யாழ்ப்பாணம், நவ.08

தீயினால் எரிந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த பெண் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளார். கல்வியங்காடு ஜி.பி.எஸ் வீதியை சேர்ந்த பிரபாகரன் ஜெயமலர் என்ற 43 வயதுடைய குடும்பப் பெண்ணே இவ்வாறு மரணமானார். குறித்த பெண் குருதிப்புற்றுநோயால் பாதிக்கப்பட்டதனால் மன அழுத்தத்துக்குள்ளாகி தற்கொலைக்கு முயற்சித்ததாக தெரிய வருகின்றது. இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்(அ)

## தொடர்ச்சிகள்

### எரிபொருளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களஞ்சியப்படுத்த எரிபொருள் தாங்கிகளை புனரமைத்து எரிபொருள்தாங்கி மத்திய நிலையம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். இது தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகருடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பிரதமர் எரிபொருள் தாங்கிய இந்திய கப்பல் 9ஆம் திகதி அல்லது 10ஆம் திகதி அளவில் இலங்கையை வந்தடையும் என்றும் தெரிவித்தார். (எ)

### மாகாண ஆளுநருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வியைத் தொடர வடக்கு மாகாண ஆளுநர் அனுமதி வழங்கவேண்டும் எனவும் கட்டளையிட்டுள்ளார்.

உதவிச் செயலாளர் தாக்கல் செய்த உறுதிகேள் எழுத்தாணை மனு மீதே இந்தக் கட்டளையை மேல் நீதிமன்றம் வழங்கியுள்ளது. வடக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் மரியதாசன் ஜேகூ, புலமைப் பரிசில்பெற்று ஆஸ்திரேலியாவுக்கு மேற்கல்வி கற்கச் சென்றிருந்தார். அவர் கடமையிலிருக்கும் போது வெளிநாடு செல்வதற்கான அனுமதிகேட்டு மாகாண ஆளுநருக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஊடாக விண்ணப்பிருந்தார். அவரது விண்ணப்பத்துக்கு வடக்கு மாகாண பிரதம செயலாளரால் பரிந்துரை வழங்கப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் ஜேகூ ஆளுநரின் அனுமதி கிடைக்க முன்னரே ஆஸ்திரேலியா சென்றுவிட்டார். இந்த நிலையில் வடக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய அவர் மீள அழைக்கப்பட்டார். நாடு திரும்பிய அவருக்கு அனுமதியின்றி வெளிநாடு சென்ற காரணத்தால் வடக்கு மாகாண ஆளுநரால் ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆளுநரின் இந்த நடவடிக்கைக்கு எதிராகவும் தனது வெளிநாடு செல்லும் விடுமுறைக்கான விண்ணப்பத்துக்கு அனுமதி வழங்க கட்டளையிடுமாறு கோரியும் உதவிச் செயலாளர் ஜேகூ யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் எழுத்தாணை மனுவைத் தாக்கல் செய்தார்.

மனு மீதான விசாரணைகள் இடம் பெற்று வந்த நிலையில் நேற்று யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் இக் கட்டளையை வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரால் மனுதாரான ஜேகூவாவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

எனினும் ஆளுநரால் அதிகாரம் பகிர்தளிக்கப்பட்ட பிரதம செயலாளர் மனுதாரரின் விண்ணப்பத்தை ஏற்று அனுமதியளித்தே ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ளார். எனவே மனுதார் வெளிநாடு சென்றமையில் நிர்வாக மீறல் கிடையாது. அதனடிப்படையில் மனுதாரர் வெளிநாட்டில் கல்வியைத் தொடர்வதற்கான அனுமதியை வழங்க மன்று கட்டளையிடுகிறது. இந்தக் கட்டளையின் பிரதி அஸ்திரேலிய தூதரகத்துக்கும் அனுப்பிவைக்கப்பட வேண்டும்' என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி கட்டளையிட்டார். (எ)

### வடக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் தேர்தல் ஆணையகத்தால் நியமிக்கப்பட்டுள்ள புதிய உறுப்பினரான அலிக்கான் ஷரீப் அவைக்கு அழைக்கப்பட்டதுடன் அவர் தனது பதவிக் கடிதத்தை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானத்திடம் கையளித்து சபை அமர்வுகளில் கலந்து கொண்டு கன்னியுரை ஆற்றினார். (எ)

### முள்ளிவாய்க்காலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிக்குள் நிரந்தர வீடொன்றினை அமைத்து வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் தற்போது பருவமழை பெய்துவருவதனால் நேற்று வீட்டின் அருகில் கொட்டில் ஒன்றைப் போடுவதற்கு கிடங்கு தோண்டிய போது வெடிபொருட்கள் வெளி வந்ததையடுத்து, கிராமஅலுவலர் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு விரைந்த விசேட அதிரப்படையினர் குறித்த பகுதியில் இருந்து மண்ணிற்குள் புதைக்கப்பட்ட நிலையில் ஐம்பது வரையான மிதிவெடிகளையும் அதற்குப்பயன்படுத்தும் வெடிப்பிகளையும் பாதுகாப்பாக மீட்டுள்ளனர். (எ)

### மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைக்குவரும் என நீதிச் சேவைகள் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது. சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் வவுனியா மாவட்ட நீதிபதியாகவும், வவுனியா மாவட்ட நீதிபதி எஸ்.லெனின்குமார் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாகவும் மாற்றம் பெறுகின்றனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி ஜே. கழநிதிபாலன் சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகவும் கல்முனை மாவட்ட நீதிபதி வி.இராமகமலன் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதியாகவும் மாற்றம் பெறுகின்றனர். முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி எம்.எஸ். எம்.சம்சுடின் மூதூர் மாவட்ட நீதிபதியாகவும் மன்னார் மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா கல்முனை மாவட்ட நீதிபதியாகவும் மாற்றம் பெறுகின்றனர். மட்டக்களப்பு நீதிவான் எம்.கணேசராஜா, மன்னார் மாவட்ட நீதிபதியாகவும் மாற்றம் பெறுகின்றனர். (உ)

### யுத்தம் முடிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புபுது சுமனசேகர தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற இலங்கையில் போதைப் பொருள் தொடர்பான தேசிய கொள்கையொன்றைத் தயாரிக்கும் முறை தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பில் உரையாற்றிய அவர்,

“வடக்கு கிழக்கில் யுத்தகாலத்தில் மதுபானம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அங்கு அதிகளவில் மதுபானசாலைகள் காணப்பட்டிருக்கவில்லை. 30 வருடங்களாக நடந்தேறிய யுத்தம் நிறைவுபெற்றதன் பின்னர் மதுசார உற்பத்தி நிறுவனங்கள் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு தமது வியாபாரத்தை விஸ்தரித்தன. இதனால் நாட்டின் மதுபாவனையில் பாரிய மாற்றம் ஏற்பட்டது.

இலங்கையில் 1995 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மதுசாரப் பாவனை அதிகரித்தது. இதற்குக் காரணம் 1995 ஆம் ஆண்டில் பியருக்கு விதிக்கப்பட்ட வரி 50 வீதத்தால் குறைக்கப்பட்டமையாகும். மீண்டும் 2010 ஆம் ஆண்டளவில் மதுபாவனை அதிகரித்தது அதற்கு வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் மதுபானசாலைகள் அதிகரித்ததே காரணம்” - என்றார். (எ)

### இளைஞனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிய நோக்கினை எட்டாத நிலையில் முடிவுக்கு வந்திருக்கிறது. மேற்படி கைதிகளின் கோரிக்கையானது தம்மீதான வழக்குகளை வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றக் கூடாது என்ற நியாயமான கோரிக்கையாக இருந்தபோதிலும், அவர்களது போராட்டத்திற்கு ஆதரவாக பல்கலைக்கழக மட்டத்தில், மாணவர்கள் தங்களது கற்கைகளை நிறுத்தியும், தமிழ் மக்கள் தரப்பிலிருந்தும் பரவலாக, பொது அமைப்புகள் தரப்பிலிருந்தும் கிடைத்திருந்தன.

எனினும், இந்தப் போராட்டத்தினை வழிநடத்தியிருக்க வேண்டிய தமிழ் மக்களது அரசியல் பிரதிநிதிகள் தாமே என்போர் இந்த விடயத்தை தமது சுயலாப அரசியலுக்காக மாத்திரம் பயன்படுத்திக் கொள்ள முயற்சித்து செயற்பட்டதன் காரணமாகவும், மேற்படி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அல்லது இக் கைதிகளின் விடுதலைக்காக நேர்மையான முறையில் செயற்படாததன் காரணமாகவுமே 41 நாட்கள் தொடர்ந்திருந்த போராட்டம், அதற்கான நோக்கம் நிறைவேறாத நிலையிலேயே கைவிடப்பட நேரிட்டுள்ளது” - என்றார். (எ)

### கல்லோடு கட்டிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பை மக்கள் எதிர்ப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு கோட்டையிலுள்ள கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தவில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் நலின் பண்டார,

“பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கல், அதிகாரங்களைப் பகிர்தல் போன்ற விவகாரங்களுக்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவை வெளியிட்டிருக்கின்றன. நாட்டைப் பிரிக்கவா புதிய அரசியலமைப்புக்கு ஆதரவாக கைகளை உயர்த்தப் போகின்றீர்கள் என எம்மிடம் கேள்விகேட்ட எமது கிராமத்திலுள்ள மக்கள், இன்று உத்தேச புதிய அரசியலமைப்பு மிகவும் சிறந்ததொன்றாகின்றனர். ஒருமித்த நாடு என்ற வகையிலும் அதிகாரங்களைப் பகிரவும், பௌத்த மதத்திற்குரிய முன்னுரிமையை அப்படியே பாதுகாக்கவும் ஏனைய கட்சிகளும் தயாராக இருக்கின்றன. அதனால் வடக்கிலுள்ள விக்னேஸ்வரன் போன்ற இனவாதிகளும், தெற்கிலுள்ள வீரவன்ச போன்ற இனவாதிகளும் இன்று ஒரு மூலைக்கு முடங்கியுள்ளனர். இந்த நிலையில் வடக்கிலும், தெற்கிலும் மூலையில் ஒதுங்கியிருக்கும் இனவாதிகளை சேர்த்துக்கட்டி நடுக்கடலில் தள்ளவேண்டும். வடக்கிலும் சரி, தெற்கிலும் சரி, இனவாதிகள் இனவாதிகளாகும். கடந்தவாரம் நடைபெற்ற நாடாளுமன்ற விவாதத்தின்போது இனவாதிகளுக்கு சிறந்த பதிலடி வழங்கப்பட்டுள்ளது” - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# அக்சய்குமாருக்கு 12 தோற்றங்கள்

சென்னை, நவ.08

ரஜினிகாந்த், அக்சய்குமார், எமி ஜாக்சன் நடிக்க, ஷங்கர் இயக்கத்தில், உருவாகி வரும் 2.0 படத்தின் இறுதிக்கட்ட வேலைகள் பரபரப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் 2.0 படம் குறித்த பலவிதமான அதிகார பூர்வமற்ற தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

எந்திரன் படம் போலவே இந்தப் படத்திலும் ரஜினிக்கு இரண்டு வேடங்கள். புரொபஸர் வசீகரனாகவும், ரோபோ சிட்டியாகவும் இரண்டு வேடங்களில் நடிக்கிறார். ரஜினிக்கு இரண்டு வேடங்கள் என்றால், அக்சய் குமாருக்கு இந்தப் படத்தில் ஒரு வேடம் தான். ஆனால் படம் முழுக்க பல்வேறு விதமான கெட் - அப்களில் வருகிறாராம்! 12 தோற்றங்களில் நடித்திருக்கிறாராம். (இ)

# மெர்சலுக்கு எத்தனையாம் இடம்?



சென்னை, நவ.08

சிறிய படங்கள் வெளியானால் மக்கள் முதலில் எதிர்பார்ப்பது என்ன கதை என்பதைத் தான். ஆனால் பெரிய நடிகர்களின் படங்களைப் பார்த்த ரசிகர்கள் கதையைத் தாண்டி, முதல் நாள் எத்தனை கோடி வசூல், மொத்த வசூல் எவ்வளவு என்பதை அறியத் தான் முதலில் ஆர்வம் காட்டுவர்.

தற்போது தமிழ் சினிமா ரசிகர்கள் அண்மையில் வெளியான விஜய்யின் மெர்சல் பட வசூல் விவரங்களை தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் இதுவரை தமிழ்நாட்டில் அதிகம் வசூலித்த முதல் 4 படங்களின் விவரம் வெளியாகியுள்ளது.இதில் எந்திரனைப் பின்னுக்குத் தள்ளி மெர்சல் இரண்டாமிடம் பிடித்துள்ளது.

1. பாகுபலி 2
2. மெர்சல்
3. எந்திரன்
4. தெறி

# செண்பா விலகினாரா?



சென்னை, நவ.08

சினிமா நடிகைகளைப் போல சின்னத்திரை நட்சத்திரங்களுக்கும் நிறைய ரசிகர்கள் உண்டு. அந்த வகையில் பிரபல தொலைக்காட்சியில் ராஜா ராணி என்ற சீரியலில் செண்பா என்ற கதாபாத்திரத்தில் நடிப்பவர் ஆல்யா மானசா.

இவர் அந்த சீரியலில் இருந்து வெளியேற இருப்பதாக நிறைய வதந்திகள் வந்திருக்கின்றன. இதனைப் பார்த்த அவர் உடனே தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில், "நான் ராஜா ராணி சீரியலில் இருந்து விலகப் போவதாக நிறையச் செய்திகள் வருகின்றன. அதை யாரும் நம்ப வேண்டாம், நான் ராஜா ராணி சீரியலில் முழுவதும் நடிப்பேன், அது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" எனப் பதிவு செய்துள்ளார். (இ)

# 2-ஜி தீர்ப்பு டிசெம்பர் 5இல்

புதுடில்லி, நவ.08

2-ஜி ஸ்பெக்டரம் வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் திகதி பற்றிய விபரம் டிசெம்பர் 5 ஆம் திகதி அறிவிக்கப்படும் என டில்லி சிபிஐ நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் போது நடந்த '2ஜி' ஸ்பெக்டரம் ஒதுக்கீட்டில் நடந்த ஊழல் தொடர்பான வழக்கில் தீர்ப்புத் திகதி நேற்றுச் செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்படும் என டில்லி சிபிஐ சிறப்பு நீதிமன்ற நீதிபதி சைனி, கடந்த அமர்வில் தெரிவித்திருந்தார். இதனால், நேற்றுப் பலத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில், இந்த வழக்கில் தீர்ப்பு இன்னும் தயாராகாததால், டிசெம்பர் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்படுவதாக நீதிபதி அறிவித்துள்ளார்.

தீர்ப்புத் தயாராக இன்னும் 3 வார கால அவகாசம் தேவைப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். (இ)

# 200 பேர் டெங்கால் பலி!



சென்னை, நவ.08

இந்தியாவில் இந்த வருடம் டெங்குக் காய்ச்சலால் 200 பேர் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் தமிழகத்தில் மட்டும் 53 பேர் டெங்கால் உயிரிழந்து இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"டெங்குக் காய்ச்சலுக்கு, கேரளாவில், 19 ஆயிரத்து, 348 பேர் பாதிக்கப்பட்டு, 35 பேர் உயிரிழந்துள்ளனர். தமிழகத்தில், 17 ஆயிரத்து, 801 பேர் பாதிக்கப்பட்டு, 53 பேர் உயிரிழந்துள்ளனர். கர்நாடகாவில், 15 ஆயிரத்து, 248 பேர் பாதிக்கப்பட்டு, ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

உத்தரப் பிரதேசத்தில் 26 பேர், மஹாராஷ்ராவில் 21 பேர் மேற்கு வங்கத்தில்19 பேர், புதுச்சேரியில் 5 பேர், டெங்கு காய்ச்சலுக்குப் பலியாகி உள்ளனர். இதுவரை, நடப்பாண்டில், இந்தியா முழுவதும், 1.21 லட்சம் பேர் டெங்குக் காய்ச்சலில் பாதிக்கப்பட்டுள்ளனர். 199 பேர் உயிரிழந்துள்ளனர்" இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ)



# தமிழறிஞர் நன்னன் நேற்று மறைந்தார்

சென்னை, நவ.08

தமிழறிஞர் பேராசிரியர் மா.நன்னன் (வயது-94) சென்னை சைதாப்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில் உடல் நலக்குறைவால் நேற்றுக் காலமானார். அவரது இயற்பெயர் திருஞானசம்பந்தன்.

1924 ஜூலை 30 கடலூர் மாவட்டம், சாத்துக்குடலில் பிறந்த அவர், வெள்ளையனே வெளியேறு, ஹிந்தி எதிர்ப்பு உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபட்டார். தமிழ்க் கட்டுரை மற்றும் பாட நூல்கள் என 70க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள அவர், எழுத்து அறிவித்தலில் "நன்னன் முறை" என்ற புதிய முறையையும் அறிமுகப்படுத்தினார். நன்னனுக்கு, பெரியார் விருது, திருவிக விருது, தமிழ்ச் செம்மல் விருது போன்ற விருதுகள் கிடைத்துள்ளன. தொலைக்காட்சிகளிலும் அவர் தமிழ் தொடர்பான பல நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். (இ)

# பாலியல் பொம்மையால் இளைஞர் சிறையில்

ஒஸ்லோ, நவ.08

நோர்வே நாட்டில் சிறுமியின் தோற்றத்தைக் கொண்ட பாலியல் பொம்மை ஒன்றை இணையத்தில் வாங்கிய இளைஞரைப் பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

இளைஞர் வரவழைத்த பாலியல் பொம்மையானது 9 முதல் 12 வயதுக்கு உட்பட்ட சிறுமியின் வடிவில் இருந்துள்ளது.

இதனையடுத்து 24 வயதேயான இளைஞரைக் கைது செய்துள்ள பொலிஸார், அவரது குடியிருப்பில் சோதனை மேற்கொண்டுள்ளனர். அதில் 1,600 ஆபாசப் புகைப்படங்களும் 26 சிறுமிகளுடனான பாலியல் காணொலிகளும் சிக்கியதையடுத்து குறித்த இளைஞர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.(இ)

# 121 வயது முதியவருக்கு கின்னஸில் இடமில்லை

சிலி, நவ.08

உலகின் அதிகூடிய வயதானவர், தனது வயதை நிரூபிக்கப் பிறப்புச் சான்றிதழ் இல்லாமையால் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சிலி நாட்டவரான செலினோ வில்லனி யூவா ஜராமில்லொ என்ற 121 வயதான முதியவரே உலகின் மிகவும் வயதான நபர் ஆவார். 1896 ஆம் ஆண்டு பிறந்த இவர், தற்போதைய மிகவும் வயது முதிர்ந்தவர் என்ற கின்னஸ் சாதனைக்கு சொந்தக்காரரான நபி தஜிமா என்பவரை விட 4 ஆண்டுகள் முன்னதாகப் பிறந்துள்ளார்.

சிலி மக்களால் டான் செலினோ எனச் செல்லமாக அழைக்கப்படும் இவர் தமது 99 ஆம் வயதில் இருந்தே உறவினருடன் வசித்து வருகிறார். தமது வீடு தீக்கிரையான தால் பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும், சேமிப்பையும் இழந்து தவித்த செலினோ, படிப்படியாக பின்னர் வாழ்வாதாரத்தை மீட்டுள்ளார்.

இருப்பினும் சிலி அரசாங்க ஆவணங்களில் செலினொவின் வயது சந்தேகத்துக்கு இடமின்றிப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1896 ஆம் ஆண்டு ஜூலை 25 இல் பிறந்த செலினோ இன்னமும் உயிருடன் இருப்பதாகவும் அரசாங்க ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பூமியில் தற்போது அதிக வயதான நபராக வாழ்ந்துவரும் செலினோவுக்கு 90 சதவிகிதம் பார்வை பறிபோயுள்ளது, அதுமட்டுமின்றி கேட்கும் திறனையும் இழந்துள்ளார். உத்தியோகபூர்வ ஆவணமான பிறப்புச் சான்றிதழ் இல்லை என்பதால் செலினோ கின்னஸ் சாதனை பட்டியலில் இடம்பெறாமல் போயுள்ளார்.(இ)


# செல்போன் சந்தேகம்: விமானத்தில் அடிதடி

சென்னை, நவ.08

கட்டார் விமான சேவை நிறுவனத்தின் விமானம் ஒன்றில் பயணித்த, கணவன்- மனைவி இடையே ஏற்பட்ட கடும் வாக்குவாதத்தால் விமானி பாதியிலேயே விமானத்தைத் திருப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கட்டாரின் தோஹா செல்லும் விமானத்திலேயே குறித்த சம்பவம் நடந்துள்ளது.

குறித்த விமானத்தில் ஒரு ஈரானியத் தம்பதியினர் பயணித்துள்ளனர். இதன் போது கணவர் உறங்கிவிட, அவரின் செல் போனை எடுத்த மனைவி அதனைப் பார்க்க முற்பட்டார்.ஆனால் கணவர் தனது கைரேகையைக் கடவுச்சொல்லாக வைத்தி



ருந்ததால் மனைவியால் பார்க்க முடியவில்லை. இருப்பினும் தூக்கத்தில் இருந்த கணவரின் கைரேகையை, போனில் பயன்படுத்தி அதனைத் திறந்துள்ளார்.

போனில் இருந்த தகவல்கள் அந்தப் பெண்ணுக்கு கடும்கோபத்தை உண்டு பண்ணியது. தமது கணவர் வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்துள்ளது குறித்த பெண்மணிக்குத் தெரிய வந்தது. இதனால் ஆத்திரம் அடைந்த அவர், மூக்கு முட்ட மது அருந்திவிட்டு, பறக்கும் விமானத்தில் தமது கணவருடன் சண்டையிட்டுள்ளார். அடிதடி வரைக்கும் அந்தச் சண்டை சென்றுவிட்டது. மது அருந்தியிருந்த அவரை அமைதிப்படுத்தும் முயற்சிகள் அனைத்தும் வீணாகின.

இதனையடுத்து உடனடியாக விமானத்தைச் சென்னைக்குத் திருப்பி விட்டுள்ளார் விமானி. பின்னர் சென்னையில் இருந்து மலேசிய விமானத்தில் குறித்த ஈரானியக் குடும்பத்தை அதிகாரிகள் அனுப்பி வைத்துள்ளனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடர் இந்தியாவுக்கு!

பரபரப்பான 'ரி-20' இறுதியாட்டத்தில் நியுஸிலாந்தை 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி கிண்ணத்தை வென்றது இந்தியா.

இந்திய-நியூஸிலாந்து அணிகளுக்கிடையேயான 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரின் முதலிரு ஆட்டங்களிலும் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப்பெற்று சமநிலையில் இருந்தன. இதனால் வெற்றிக்கிண்ணம்யாருக்கு என்பதைத் தீர்மானிக்கும் போட்டியாக நேற்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற மூன்றாவது போட்டி அமைந்தது. ஆனால் நேற்றைய போட்டி ஆரம்பமாக முன்னரே மழை விளையாடத் தொடங்கிவிட்டது. இதனால் போட்டி மிகத் தாமதமாகவே தொடங்கியது. எனவே 8 ஓவர்கள் கொண்டதாகப் போட்டியின் அளவு சுருக்கப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

மைதானம் ஈரப்பதனாக இருந்ததால் இந்திய வீரர்கள் ஓட்டங்கள் எடுக்கத் திணறினர்.

சிஹர் தவான் 6 ஓட்டங்களுடன் சௌத்தியின் பந்தில் பிடிகொடுத்து ஆட்டமிழப்பை ஆரம்பித்து வைத்தார். அடுத்த பந்தில் ரோஹித் சர்மாவும் 8 ஓட்டங்களுடன்வெளியேறினார்.

அதன் பின்னர் களம் புகுந்த அணித்தலைவர் விராட் கோஹ்லி , சோதியின் ஓவரில் அடுத்தடுத்து பவுண்டரி, சிக்ஸர் அடித்து அசத்தினார்.ஆனால் அதே ஓவரில் அவரும் 13 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். பின்னர் மனிஷ் பாண்டே 17 ஓட்டங்களை எடுத்து வெளியேற, ஹர்திக் பாண்டியா 14 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். அதிரடி வீரர் டோனி களமிறங்கிய போதும், எந்தவொரு பந்துவீச்சையும் எதிர்கொள்ளவில்லை. இந்திய அணி 8 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி ஆரம்பம் முதலே விக்கெட்டுகளை இழக்கத் தொடங்கியது. மார்டின் குப்ரில் 1 ஓட்டத்தோடு 'போல்ட்' ஆனார். முன்றோ ஒரு சிக்ஸர் அடங்கலாக 7 ஓட்டங்களை எடுத்து பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அணித்தலைவர் வில்லியம்சன் 8 ஓட்டங்களோடு 'ரன் அவுட்டானார்'.அவரைத் தொடர்ந்து அடித்தாடிக்கொண்டிருந்த பிலிப்ஸும் 11 ஓட்டங்களோடு, யாதவின் பந்தின் தவானிடம் பிடிகொடுத்தார். நிக்கோலஸ் 2 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். நியூஸிலாந்து அணி 8 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்கு 61 ஓட்டங்களையே எடுத்தது. கிராண்ட் ஹோம் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். இதனால், 6 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இந்திய அணி, தொடரைத் தனதாக்கியது.

(அ)

CONNECTING YOU WITH CARE FOR 20 YEARS
Sri Lanka Telecom Mobitel
We Care. Always.



## இம்முறை குறி தப்பாது

"இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வைத்து வீழ்த்துவதே எனது கனவு. அந்தக் கனவு இம்முறை நிறைவேறும்" என இலங்கையின் சுழல்பந்து வீச்சாளரான ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி இந்திய அணியுடன் மூன்று வகைப் பிரிக்கெட் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவுள்ளது. இதற்காக இன்று இந்தியா நோக்கிச் செல்லவுள்ளது.

இந்த நிலையில், இந்தியத் தொடர் குறித்து இலங்கை அணியின் சுழல்பந்துவீச்சாளரான ஹேரத் கருத்துத் தெரிவித்துள்ளார்.

"சில வருடங்களுக்கு முன்னர் தென்னாபிரிக்காவை அதன் சொந்த மண்ணில் வைத்து வீழ்த்தினோம். ஆனால், இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகளை அந்தந்த நாடுகளில வைத்து எந்தவொரு டெஸ்ட் தொடரையும் வெல்ல முடியவில்லை.

"எனவே, இந்தியாவுக்கு எதிராக நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவதே எனது கனவாகும். பாகிஸ்தானுடனான டெஸ்ட் வெற்றி நம்பிக்கையை அளித்துள்ளது. அதன் தொடர்ச்சியாக இந்தியாவையும் வீழ்த்துவோம் என்ற நம்பிக்கை உள்ளது." -என்றார்.

(ஐ)

## ஸ்டீவன் அவுட்!



முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஆஷஸ் தொடரிலிருந்து ஸ்டீவன் பின் விலகியுள்ளார். இதனால் இங்கிலாந்துக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் கிரிக்கெட் தொடர் பிரிஸ்பேர்ணில் எதிர்வரும் 23ஆம் திகதி தொடங்கவுள்ளது.

ஏற்கனவே இங்கிலாந்து அணியின் சகல துறை வீரரான பென் ஸ்ரோக்ஸ் ஆஷஸ் தொடரில் இடம்பிடிக்க முடியாமல் போனது அந்த அணி பெரிய இழப்பாகக் கருதப்படுகிறது.

இந்நிலையில், பேர்த்தில் நடைபெற்ற முதல் பயிற்சி ஆட்டத்துக்குத் தயாராகி வரும்போது, ஸ்டீவன் பின்னின் முழங்காலில் காயம் ஏற்பட்டது. இதனால், அவரும் ஆஷஸ் தொடரில் பங்கேற்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

(ஐ)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்
◆ மரண அறிவித்தல்
◆ நினைவஞ்சலி
◆ கண்ணீர் அஞ்சலி
கட்டணம் இன்றி பிரசுரிக்க
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
எதிரொலி Ethiroli
021 3004848
நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 08.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.